## கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழுள்ள திருகோணமலை வடக்கு வலயக்கல்வி அலுவலகத்தின் வலயக்கல்வி பணிப்பாளர் பதவிக்கான வெற்றிடத்தினை நிரப்புதல் - 2017

01. கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழுள்ள திருகோணமலை வடக்கு வலயக்கல்வி அலுவலகத்தில் வெற்றிடமாகவுள்ள வலயக்கல்விப் பணிப்பாளர் பதவிக்கு தற்போது கிழக்கு மாகாணத்தில் கடமைபுரியும் இலங்கை கல்வி நிர்வாக சேவையிலுள்ள தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 2017.07.28 ஆகும்.

02. **தகைமைகள் :**

i. பொதுச் சேவை ஆணைக்குழு / கல்வி அமைச்சின் செயலாளரினால் நிரந்தர நியமனக்கடிதம் வழங்கப்பட்ட இலங்கை கல்வி நிருவாக சேவையிலுள்ள தரம் I / தரம் II ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்.

ii. விண்ணப்பதாரிகள் குறிப்பிட்ட தரத்தில் 2017.07.28 ஆந் திகதிக்கு உடன் முன்னரான 05 வருட செயலூக்கம் மிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருப்பதோடு, அக்காலத்தினுள் கிடைக்கவேண்டிய சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளதுடன், எவ்விதத்திலான ஒழுக்காற்றுத் தண்டனை எதற்கும் ஆளாகாதவராகவும் இருத்தல் வேண்டும்.

iii. விண்ணப்ப முடிவுத்திகதியில் 60 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

03. **ஆட்சேர்ப்பு முறை :**

அறிவித்தலில் உள்ளவாறு தகைமைகளைக் கொண்ட குறிப்பிட்ட சேவையைச்சேர்ந்த விண்ணப்பதாரிகளுள் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப்பரீட்சை சபையொன்றினால் நடாத்தப்படும் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் கூடிய புள்ளிகளைப்பெறும் விண்ணப்பதாரி இப்பதவிக்கு நியமிக்கப்படுவார்.

கட்டமைப்புச்சார் நேர்முகப்பரீட்சையின்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக புள்ளிகள் வழங்கப்படும். (100 புள்ளிகள்)

i. தற்போதைய தரம் : தரம் I (10 புள்ளிகள்) / தரம் II (5 புள்ளிகள்)

ii. கல்வித்தகைமை : M.Ed / M.Phil, (10 புள்ளிகள்), Post Graduate Diploma (8 புள்ளிகள்)

iii. பதில் கடமை : மேலதிக கல்விப்பணிப்பாளர் / வலயக்கல்விப் பணிப்பாளர்
(ஒரு வருடத்திற்கு 5 புள்ளிகள் வீதம் ஆகக்கூடியது 20 புள்ளிகள்)

iv. மொழித்தேர்ச்சி : தமிழ் அல்லது சிங்களம் (7 புள்ளிகள்), ஆங்கிலம் (10 புள்ளிகள்)

v. விசேட அடைவுகள் : வெளியீடுகள் (10 புள்ளிகள்), ஆராய்ச்சி (10 புள்ளிகள்)

vi. நேர்முகப்பரீட்சையின் போதான செயல்திறன் (15 புள்ளிகள்)

**குறிப்பு :** இப்பதவிக்கான ஆட்சேர்ப்பின்போது இலங்கை கல்வி நிருவாக சேவையிலுள்ள தரம் I உத்தியோகத்தர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும். இலங்கை கல்வி நிருவாக சேவையிலுள்ள தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இல்லாதபட்சத்தில் மாத்திரம் இலங்கை கல்வி நிருவாக சேவையிலுள்ள தரம் II ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் கருத்தில் எடுக்கப்படுவர்.

04. **விண்ணப்பிக்கும் முறை :**

இவ்வறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமைவாக, A4 அளவான தாளில் இரு பக்கங்களையும் மாத்திரம் பாவித்து தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2017.07.28 ஆந் திகதியோ அல்லது அதற்கு முன்னர் “செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம், 198, உட்துறைமுக வீதி, திருகோணமலை என்னும் முகவரிக்கு

பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். (விண்ணப்பத்தினை செயலாளரின் தனிப்பட்ட பெயருக்கு அனுப்புவதை தவிர்த்துக்கொள்ளவும்) விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் குறியீட்டு இலக்கம் **"EX/Rec/17/13"** என்ற குறியீட்டினை குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

**உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமையாதவையும், பிழையின்றி பூரணப்படுத்தப்படாதவையும், மாதிரி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் குறியீட்டு இலக்கமின்றியும், முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எதுவித அறிவிப்புக்களுமின்றி நிராகரிக்கப்படும்.** உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத்தவறுவதால் ஏற்படும் நட்டத்திற்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் இந்த அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

05. இப்பதவிக்கு உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்யும்போது கிழக்கு மாகாண கௌரவ ஆளுநரின் தீர்மானமே இறுதித்தீர்மானமாகும் என்பதோடு, இந்நியமனம் தொடர்பாக இங்கு குறிப்பிடாத விதிகள் சம்பந்தமாக ஏதாவது விடயம் இருப்பின், இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் சிபாரிசின் அடிப்படையில் கிழக்கு மாகாண கௌரவ ஆளுநருக்குரியதாகும்.

**எச்.ஈ.எம்.டபிள்யு.ஜி.திஸாநாயக்க**,
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்.